உளி - 8 | ஓசை - 3 | ஆகஸ்ட் - 2024 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவு எண்: 521/2018

**நிறுவனர் & ஆசிரியர்:**
ஜின்னா அஸ்மி

**நிர்வாகக் குழு:**
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

**ஆசிரியர் குழு:**
படைப்பு தேர்வுக்குழுமம்

**இதழ் உருவாக்க உதவி:**
ஷென்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

**வடிவமைப்பு:**
ஆர்.பிரகாஷ்

**இணையதள முகவரி:**
padaippu.com

**அலுவலக முகவரி:**
படைப்பு குழுமம்
# 8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

admin@padaippu.com
+91 73388 97788, 73388 47788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| ரகுநாத் வ | 04 |
| ரா.ராஜசேகர் | 04 |
| ஷிபானா அஸீம் | 05 |
| ஆ முருகேசுவரி | 06 |
| சு.கேசவன் | 07 |
| முகமது பாட்சா | 07 |
| ச.ஆனந்தகுமார் | 07 |
| கா.ரஹ்மத்துல்லாஹ் | 08 |
| தங்கேஸ் | 09 |
| நாஞ்சில் டென்னிசன் | 10 |
| அன்பழகன்ஜி | 10 |
| மா. காளிதாஸ் | 11 |
| மணி அமரன் | 12 |
| த.முருகன் | 12 |
| கதிரவன் வீ | 12 |
| க. அய்யப்பன் | 13 |
| யாழ் தண்விகா | 13 |
| மு. பிரபு | 13 |
| முஜாமலா | 14 |
| சங்கரி சிவகணேசன் | 15 |
| செ.வீரமணி | 16 |
| மகிழினி காயத்ரி | 16 |
| இன்போ.அம்பிகா | 17 |
| ப.காளிமுத்து | 17 |
| பிரபுசங்கர் க | 18 |
| ம.சக்திவேலாயுதம் | 19 |
| தமிழ்ச்செல்வன் | 19 |
| ஐ.தர்மசிங் | 19 |
| அ.சீனிவாசன் | 20 |
| தமீம்.அசாருதீன் | 20 |
| பன்னீர்செல்வம் | 21 |
| கோ.லீலா. | 22, 23 |
| கி.கவியரசன் | 24 |
| ச. சத்தியபானு | 24 |
| லாஸ்யா | 24 |
| நயினார் | 25 |
| பூங்கோதை கனகராஜன் | 25 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | 25 |
| கௌ ஆனந்தபிரபு | 26 |
| சூ. சசி | 27 |
| மகேஷ் சிபி | 27 |
| நிர்மலா சென்னியப்பன் | 28 |
| ஷிபா | 29 |
| சகா | 29 |
| கோவை. நா.கி.பிரசாத் | 30 |
| பாபு | 30 |
| ச.ப.சண்முகம் | 30 |
| கம்பம் ஷர்ஜிலா | 30 |
| செந்தூர் குமார் | 31 |
| நித்யா | 32 |
| கருவை ந.ஸ்டாலின் | 32 |
| சுரேஷ்பாபு ராசேந்திரன் | 33 |
| தமிழ்மகன் | 34 |
| மணவை லைவின் | 35 |
| வைகை விஜய் | 35 |
| மு.முபாரக் | 35 |
| முனியாண்டி ராஜ் | 36 |
| சாய் மீரா | 36 |
| தி.கலையரசி | 37 |
| மகேந்திரன் நவமணி | 37 |
| செ.ரா.கிருஷ்ணகுமாரி | 37 |
| தமிழ்ச்செல்வன் | 38 |
| ஆத்மாஜீவ் | 38 |
| வி.வி கலைச்செல்வி | 39 |
| லக்ஷ்மி | 39 |



அந்திப்பொழுதில்
கடலோடு நிற்கும் உங்களுக்கு
எத்தனை நிழல்களோ
அதிலொன்றாக விலகிச்செல்கிறது
மேற்கிலொரு முகம்

விழும் நீரை அள்ளிப்பருகுவது
பாறையின் உள்ளெண்ணம்
கன்னத்தில் அறைவது
மட்டுமே அருவியின் பணி

இந்த மேகங்களுக்குள்
எங்கோ ஒளித்து வைக்கப்பட்டது முன்பொருகாலத்தில்
இப்போது உள்ளுக்குள்ளிருக்கும் லப்டப்

மனிதர்களின் முகமாய் மாறிக்கொள்ளும்
இலைகளுக்கிடையே நீளும் கரம் மட்டுமே
இயற்கையுடையது

எழுதி முடித்ததும்
மணலில் கிறுக்கியக் கவிதைகளை
அழிக்கப் பழக்கப்பட்டிருக்கிறது
பிச்சைக்காரரின் கைப்பேசி!

★ ரகுநாத் வ

மழையின் சுவை
கசந்தபோதுதான்
மனம் கசங்கியதா?

மனம் கசங்கியதால்தான்
மழை கசந்ததா?

கசப்பு
கசங்கிய சுவை

கசங்கல்
கசப்பேறிய சலவை

இரண்டின்
இடுக்கிலும் தவிப்பது
மனசின் இம்சை சுகம்

இரண்டையும்
செரித்துச் சிரிக்கும் மனதிற்கு
மழையும் கசப்பும்
சுவையற்ற சுவை

★ ரா.ராஜசேகர்



ஒரு கால நேசம்
முதல் சந்திப்பில்
முதல் பார்வையில்
முதல் பேச்சில்
வந்துதானெனன்றாலும்
அர்த்தமில்லாததென்றாலும்
காரணங்களற்றதென்றாலும்

ஒரு அந்தியில் உதிர்ந்து விழும்
மலரைப் போலல்லாது

அந்தியில் மங்கிவிடும்
வெயிலைப் போலல்லாது

பெய்துவிட்டு ஓய்ந்துவிடும்
பருவ மழைபோலல்லாது

காலத்துக்கும்
சில காயங்களை தந்துவிடுகிறது
விழியோரம் கொஞ்சம்
கண்ணீரை கசியவிடுகிறது

ஒரு பாடலின் முடிவில்
ஒரு வாசனை வகையில்
ஒரு பெயரின் உச்சரிப்பில்
ஒரு குரலின் தோரணையில்
ஒரு கால நேசத்தின் நினைவுகள்
உன்னை உலுக்கிவிடலாமில்லையா

உன் நினைவில்
இப்படியாக ஒரு பழங்காதல்
அவ்வப்போது வந்துபோவது
பரவாயில்லை விட்டுவிடு

கலங்கித் தவித்தலும்
பின் கலங்கி மீளுதலும்
ஒரு வகை ஞானமே

★ ஷிபானா அஸீம்



அன்பின் நீளத்தை அளக்க
முயன்றபோதெல்லாம்
கண்ணனைக் கட்டமுடியாமல்
தவித்த யசோதையின் நிலைதான்...

அப்படித்தான் இதுவும்...
என்னை எவ்வளவு பிடிக்குமென
ஒன்றிலிருந்து பத்துக்குள்
ஒரு அளவு கூறென்றாய்...

எனக்கு அளக்கத் தெரியாததால்
நானோ சுழியத்தில் நின்றேன்...
நீயோ பேரன்பின் மிகுதியால்
பத்தைக் கடந்து நின்றாய்...

இருவரும் வரையறைக்குள் நிற்கவில்லை
விதி மீறல் செய்துவிட்டதாக
ஏதோ விதி விளையாடி
விலக்கி வைத்ததுவிட்டது...

இங்கு ஆட்டத்திலிருந்து
விலக்கப்படுதல் ஒன்றும் புதிதல்ல...

விளையாட்டு வினையாகுமென்பார்களே
அது இது தானோ...

இருக்கட்டும்,
அன்பினை அடைக்கும் தாழில்லை
என்பதனை மறந்துவிட்டனரே...

அசையாமல் இருக்கும் போதெல்லாம்
அசைபோட்டுக் கொள்ளும்
அடிமனம் தன் தாழினை
கழட்டுவதேயில்லை...

உன்மத்தத்தில் உதடுகள்
ஊர்வலம் செல்வது
நினைவாக இருந்துவிட்டுப் போகட்டும்
நீ உன் வேலையைப் பார்...

★ ஆ முருகேசுவரி



வெற்றிடம் நிரப்பும்
வண்ணத்துப்பூச்சி
இலையுதிர்ந்த மரம்!

★ சு.கேசவன்

எனக்கென்ன என்பது
சிலுவையில் ஓங்கி அறையப்படும் ஆணி.
சுதந்திரத்தைப் புரிய வைக்கத்தான்
ஒவ்வொரு தடவையும்
சர்வாதிகாரிகள் பிறக்கிறார்கள்.

★ முகமது பாட்சா

கைவிடப்பட்ட நம்பிக்கைகள் பற்றி
சுழியின் உச்சத்தில் தக்கையாகி
கரையடையத் துடிக்கிற அறிவிலி...

காரிருள் அடர்த்தியில் மின்மினிகளின்
வெளிச்சத்திற்கு பரபரக்கும்
மனமெனப்படும் வடிவிலி...

பாலைவனத்தின் முகமறையும்
வெப்ப அலைகளில்
ஊற்றுக்கென உருகும் முடிவிலி...

பச்சையமிழந்த தாவரமென...
வண்ணங்களற்ற வானவில்லாய்...
சோலையிழந்து சோர்ந்து போய்
தேற்றுவார் யாருமற்று எதிலியாகி

தலை கவிழ்ந்து தனிமையில்
தவமிருக்கிறது நுகரப்படாத
பிரியங்கள்...

★ ச.ஆனந்தகுமார்



திரும்பும் இடமெல்லாம் கண்ணீர்
எதை எழுதுவதென்று தெரியவில்லை
அன்பை எழுதுகிறேன்
ஆறுதல் பூக்கட்டும்.

★

சரிந்து விழுந்த மணற்குவியலெல்லாம்
உயிர்களுக்குச் சவக்காடானது.
அத்தனை மனிதரின் உடலைத்தின்று
நாளையங்கு செடிகள் முளைக்கும்
மீண்டும் ஒரு மனிதன் பிறப்பான்

★

ஒரு நூறுகிராமில்
ஒரு வெற்றி தகுதியிழக்குமென்று
இன்றுதான் தெரிந்தது.
நல்லவேளை
வாழ்க்கை இத்தனை கடினமில்லை

★

ஒரு மழை என்னென்ன செய்யுமென்று
காதலர்களை இனி கேட்காதீர்கள்.
மனிதர்கள் இனியென்ன செய்வார்களென்று
மழையைக் கேளுங்கள்.
அவர்களின் உயிர்த்தலையும் சாதலையும்
இப்போது
இயற்கைதான் எழுதிக்கொண்டிருக்கிறது.

★

கடவுளை நம்புங்கள்
அல்லது நம்பாமலிருங்கள்
அன்பை எப்படி நம்பாமலிருப்பீர்கள்?
தனது கண்ணீரை மறைத்து
உதவும் கரங்கள்
இன்னும் உயரத்தில்தான் இருக்கின்றன.

★ கா.ரஹ்மத்துல்லாஹ்




ஒரு முன்னறிவிப்பில்லாத
விண்வெளிப்பயணத்திற்கு
விரையும் ஒருபறவை
சிறகுகளை மறந்து
வைத்து விட்டு வந்து விடுகிறது
தன் கூட்டிலேயே

மௌனங்கள் சூழ்ந்த வெற்றிடத்தில்
திகைத்து நிற்கும் போது
எதிரில் தென்படுகிறது
வார்த்தைகளை மறந்து வைத்து விட்டு வந்த ஒரு
கவிதையின் உருவம்


வார்த்தைகளற்ற கவிதையும்
சிறகற்ற பறவையும் சிநேகிதம் கொள்ள
பொதுவான வெளியென்று எதுவுமில்லை
கடலாய் பரவியிருக்கும்
அடர் மௌனத்தைத் தவிர

தன்னை பிறிதொன்றில் அடையாளம்
கண்டு கொள்வதென்பது
பிறிதொன்றை தனக்குள் முழுமையாய்
அனுமதித்தல் என்ற வண்ணம்
ஒன்றையொன்று தழுவி இன்புறும் வேளையில்

பேரண்டங்களையெல்லாம்
தன் வயிற்றில் உடையாத
நீர்க்குமிழிகளாக உருட்டி விளையாடும்
மகாமௌனம்
இரண்டையும் தன்னுள்
விழுங்கி விடுகின்றது பேதமற

தாமதமாய் உடலை சுமந்து வந்து சேர்ந்த
சிறகுகளும் வார்த்தைகளும்
அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கின்றன
யுகம் யுகங்களாக

★ தங்கேஸ்




அரை கிலோ அரிசி பருப்பு
ஒரு சில காய்கறிகள்
எங்கோ ஒரு அண்ணாச்சி கடையில்
காத்திருக்கிறது...

அதற்கான காசும்
யாரோ ஒருவரின் சட்டைப்பையில்
காத்துக் கொண்டே இருக்கிறது...

விற்கப்பட போகும் அந்த பிளாஸ்டிக் குவளை கூட
அமைதியாய் தான் அமர்ந்திருக்கிறது...

ஆனால் அந்த மிதி வண்டியின் சக்கரமும்...
அவர் இதயமும் தான்...
அந்த அற்புதம் நிகழ்வதற்காக
சுழண்டு கொண்டே இருக்கிறது...

★ நாஞ்சில் டென்னிசன்

## எந்நாளோ...?

அந்நாள்
பூமி பிளக்கும்
வானம் கிழியும்
மலைகள் சரியும்
காடுகள் எரியும்
கடல்கள் வற்றும்
நட்சத்திரங்கள் உதிரும்.
ஒன்றையொன்று
முட்டி மோதி
புதிதாய் ஒரு
கிரகம் தோன்றி
பூமியென தனை சொல்லும்.
அதற்கு எத்தனை நிலவென
யாருக்குத் தெரியும்.

★ அன்பழகன்ஜி



வற்றிய புன்னகையை
நிராகரிக்கப்பட்ட அன்பே
ஒருபோதும் தெரிவிக்கப்படாத ஆதரவை
நெரிக்கப்பட்ட குரல்வளையில்
பிதுங்கி நிற்கும் ஒரு சொல்லை
துடைக்க மனமில்லாத கண்ணீரை
அவ்வளவுதான் என்று
முடிவு செய்யப்பட்ட சின்ன வாழ்வை

பலமுறை பயன்படுத்திய
எளிதில் கிழிந்துவிடக் கூடிய
இந்தச் சிறிய நெகிழிப்பையில்
எவ்வாறு அள்ளிச் செல்ல முடியும்?

மேலும் அந்தச் சோதனைச் சாவடிக்காரனுக்கு
என்ன பதில் சொல்வது?

அவனுடைய கருவியின்
'பீப்' சத்தத்திற்குத் திரும்பிப் பார்க்கும்
இறுகிய முகங்களை எப்படி எதிர்கொள்வது?

பொத்திப் பொத்திக் கொண்டு வந்த கருணை
பொத்தென விழுந்து சிதறும் போது
அந்த இடம் புகைமண்டலமாகி விடாதா?

பதுக்கி வைக்கப்பட்ட
நிவாரணச் சாக்குகளும்
கைவிடப்பட்ட வழிகளும் நிறைய உள்ளன.

வா என் மெல்லிதயமே
கலவரப்படாமல் தளராமல்
மெல்ல நட

அருகில்
மிக அருகில் தான் உள்ளது
பதுங்கு குழியாகவும்
ஆயுதக்கிடங்காகவும்
தன்னை உருமாற்றிக் கொண்டிருக்கும்
நம் மனம்.

★ மா. காளிதாஸ்



அன்பெல்லாம் சும்மா
மூன்றெழுத்து வார்த்தையது
ஈமோஜி இதயத்தை எறி போதும்.
காட்டு கத்தலை விடு
பின்வரிசையில் பிபி நிற்கிறது
அடக்கி வாசி
கோபத்தை காட்ட சிகப்பு மண்டை இருக்கிறது.
வரி வரியாக எழுதிவிடலாம்
விரல்கள் வலிக்குமே என்ன செய்ய
மனமில்லா பூச்செண்டை விட்டெறி
வாழ்த்துக்கள் சொல்வதற்கு.
அழ அணைக்க சிரிக்க சிந்திக்க
முத்த முழிக்க மோகிக்க
விரல் நுனியில் இருக்கிறது
சதுர செவ்வக உலகில்
மஞ்சள் பந்துகளாய் மனித மனங்கள்.

★ மணி அமரன்

தலைகீழாய் பிடித்தாலும்
தாழாது மேல் நோக்கும்
நெருப்பு.!

★ த.முருகன்

எந்த பாகுபாடும் இன்றி
தேர்வு செய்யப்பட்டார் விளையாட்டு வீரர்
சா பூ த்ரீயில்

பட்டங்கள் வாங்க அடம் பிடித்தார்கள் பிள்ளைகள்
வாங்கித் தர மறுத்தார்கள் பெற்றோர்கள்
புத்தகங்களே வானில் பட்டங்கள் ஆகின

மூன்று விரல்களே போதுமானதாக இருந்தது
பிள்ளைகளுக்கு காய் விட்டு
பழம் சொல்லி சமாதானம் ஆக

இப்போதைக்கான ஃபேஷன் டிசைனை
அப்போதே கிழிந்த ஆடை உடுத்தி
முன் மொழிந்தார்கள் குழந்தைகள்

பரந்து விரிந்து கிடந்தன
குழந்தைகள் மனம் போல தெருக்களும்

குழந்தை பருவத்தை
சுருங்கிப் போன உலகத்தில்
எழுதுகோல் இன்றி கைபேசியில்
ஒற்றை விரலால் ஒற்றி எடுக்கிறேன்

★ கதிரவன் வீ



சாலையோர யாசகர் தட்டில்
விழுந்து கொண்டே இருக்கிறது
பாதைசாரிகளின் கருணை.

★

பூவை இழந்த செடி
காம்பை வட்டமிடுகிறது
சிவப்புத்தட்டான்.

★

கொட்டும் மழை
இரவுவரை தொடர்கிறது
குடை வியாபாரம்.

★

நள்ளிரவு இருட்டு
புகை பிடிக்கும் கீதாரி
சத்தம் போடும் செம்மறி

★

தொடுதிரையில் பிசிறு
துடைக்க துடைக்க
மினுங்கும் ஒளித்துகள்

★

பறவை பறந்ததும்
கிளையில் அமர்கிறது
தூரத்து வானம்.

★ க. அய்யப்பன்

தப்புப் பண்ணினா
சாமி கண்ணைக் குத்தும்
என்று சொல்வார் அப்பா.
பள்ளிப் பருவத்திலேயே
என்னிடமிருந்து அப்பாவைப் பறித்து
பெரிய தப்புப் பண்ணின
சாமியின் கண்ணைக் குத்த
நானும் தேடுகிறேன்
இப்போவரை கிடைக்கவே இல்லை
அப்பாவுக்கு மட்டும் தெரிந்த சாமி...

★ யாழ் தண்விகா

குட்டை
மேடானது
ஆக்கிரமிப்பு.

★ மு. பிரபு




நீ பொய்சொல்
பொறாமை கொள்
புகழுக்கு அலை
எல்லாம் செய்
எப்படிவேண்டுமோ ஆடு!

ஏற்றத் தாழ்வெனக் கூறு
ஒப்பாரி வை
ரசம் பிழியப் பேசு
மனதை நஞ்சாக்கு
ஆதாயம் தேடு!

உண்மைகளை போலியாக்கு
உறவினை
உறவிற்குள்
எதிரிபோல் இருக்க வை
உனக்கு பிடிக்குமெனில்
எதையும் சரிகாண்

மன பொன்னாடைகளை
விலைபேசு
அடக்கமென்றும்
ஆறுதலென்றும்
பதுங்கிச் சிறகு விரி!

இப்படித்தான்
காலப் புத்தகத்தின் முதுமை
நல்லவனாய் இருப்பவன் ஒருவருக்கான
குறிப்பை
இன்னொரு நாளில்
வாசிக்கத் தருகிறது

புரட்சி புதுமையெனப்
பெயர்கள் சொல்லி
பொருள் விளங்காமல்
மொழிப் பற்றும்
நாவின் வலுக்கள்
அவையென்பதால்

உன் விரல்கள்
உதிர்க்கும் கோலப்பொடியில்
நீரூன்றி
ஆழத்தை விதைத்து வை
உன் எழுத்தும்
உன் செயலும்
ஒன்றாக இருக்கட்டும்.

★ முஜாமலா



கூடு திரும்பிய பின்பும்
பறந்து திரிந்த காட்டை
நினைத்துக்கிடக்கும்
பறவையைப் போல

இந்நெடு வாழ்வு
நீங்கும் வரை
நினைத்துக் களிக்க நினைவுகள்
நிரம்பிக் கிடக்கின்றன...

பசியெடுக்கும் போதெல்லாம்
இரை தேடச் சென்றுவிடும்
மனப்பறவை
ஞாபகச் சுள்ளிகளை
பொறுக்கத் தொடங்குகின்றது...

இனி வரும் பெருமழையில்
துளிர்க்குமென்ற கனவில்
பட்டமரமும்...

அதில்
கூடு கட்டச் சுள்ளி பொறுக்கிய
பறவையின் வேண்டுதலும்
ஒரு மழைக்கான தவம்தான்...

ஆம்
தியானத்தில் இருக்கின்றன
அந்த மரம்...
அந்தப் பறவை...
நிறைய ஞாபகங்கள்...

கூட்டுப்பிரார்த்தனையில்தான்
துளிர்க்கிறது இப்பேரண்டம்...

★ சங்கரி சிவகணேசன்



இரண்டு விரல்களின் அணைப்பில்
ஒரு இதயத்தை வரைந்து
அன்பை பகிரலாம்

அதே விரல்களின்
இதழ்களால் முத்தமிட்டு
அருமை என்றொரு
குறியீட்டை எழுதி
உலகை அழகாக்கலாம்

கட்டை விரலினை
மட்டும் உயர்த்தினாலும்
சம்மதத்தையும் மகிழ்வையும்
பகிர்ந்து கொள்ளலாம்

மொத்த விரல்களையும்
இணைத்து உயர்த்தினால்
அனைவரையும் ஆசீர்வதிக்கலாம்

அத்தனை
சாத்தியங்களையும் துறந்து
வெறுப்பை உமிழ மட்டுமே
சபிக்கப்பட்டிருக்கிறது
ஒவ்வொரு முறையும்
உயர்த்தி மிரட்டுகிற
உங்கள் ஆட்காட்டி விரல்

★ செ.வீரமணி

அமுதூறிக் கிடக்கிறது
அன்பின் பெரு நிலம்

சர்வமும் ஒடுங்க
மறுபிறவி எடுக்கிறது
ஆன்மா

சிறகுகளின்
வண்ணப் புள்ளிகளுக்குள்
தோல் உரித்த
வலியின் ரேகை

இருளுக்குள்
ஒளி வேண்டி
ஒரு தவம்

தன்னைத் தானே
மலர்த்தும்
வைராக்கியத்தின் இருள்

★ மகிழினி காயத்ரி



எனதறையில் எல்லாம்
இருக்கிறது உன் சாயலில் ...
அறை வழியும் காற்றில்
கூட உந்தன் வாசம் ...
நுதலோடு பற்றிப் படர்ந்து
சிலிர்க்கிறதுன் மூச்சு...
அதீத ப்ரியங்களின்
நூலெடுத்து நெய்து கொள்கிறேன்
இதழ் போர்த்திய புன்னகை...
ஞாபகத் துகள்களில்
உன் பெயர் கிறுக்கி
என்னுள் குழந்தைமை
தேடியெடுக்கிறது காதல்...
எப்போதும் நீ வந்தாலும்
ஏகாந்த மழையோடும்
லெமன் க்ராஸ் தேநீரோடு
வரவேற்கும் ப்ரியம் இருந்தால்
எப்'போதைக்கும்'
அது போதும்...
நானெனும் மொழிக்கு
நீ யெனும் மௌனம் தொட்டு
இப்படித்தான் திருத்துகிறது
இவ்வாழ்வு...

★ இன்போ.அம்பிகா

யாரோ தடுமாறி விழும்போது
சட்டென ஓடி வந்து தாங்குவதோ
எங்கோ இழைக்கப்பட்ட அநீதிக்கு
இங்கிருந்து குரல் கொடுப்பதோ
பாதிக்கப்பட்டவரின் பக்கம் நின்று
துளி கண்ணீரை சிந்துவதோ
கைவிடப்பட்ட ஒருவருக்காக மனமுவந்து
தன் கரங்களை நீட்டுவதோ
இவற்றுள் ஏதோ ஒன்று நிகழும்போது
மனிதர்கள் சிலநேரங்களில்
மனிதர்களாகத்தான் இருக்கிறார்கள்
என்பது உறுதிசெய்யப்படுகிறது

★ ப.காளிமுத்து



எத்தனை முயன்றும்
மீண்டும் ஒட்டவே முடிவதில்லை
நம் உறவை...

முன்பெல்லாம் என் அழைப்பிற்கு
அனிச்சையாக காத்திருந்தது
உன் அலைபேசி...

அய்யய்யோ... அழைக்கிறானே...
அழைத்து தொலைகிறானே...
என சலிப்படையவும்
கற்றுக்கொண்டது அதே அலைபேசி...

அனைத்தையும் மறந்து
பேசத் தொடங்கினாலும்
ஒன்றரை நிமிடங்களுக்குள்
உன் மின்சாரம் தடைப்பட்டு விடுகிறது
அல்லது
ஏதேனும் ஒரு அவசர வேலை
கண்டிப்பாக குறுக்கிடுகிறது...

ஒரு காட்சியை, நிகழ்வை, சம்பவத்தை
பேரார்வத்துடன் விவரிக்க தொடங்கினால்
"சட்டென்று விஷயத்திற்கு வா..." என
நம் உறவின் கழுத்தை உடைக்கிறாய்...

பசப்பு பசை இருவருக்கும் வேண்டாம்
இன்னும் பேசி பேசி
மிதிபடவும் வேண்டாம்...

உனக்கான உலகத்தில்
உயர உயர பற
எனக்கான சிறு கூட்டில்
தவழ்ந்து உடைந்து போகிறேன்
நமக்கான உலகம்
பேரழகாய் அப்படியே இருக்கட்டும்...

நிஜங்களை விட
நினைவுகள் நல்லவை... வல்லவை...

★ பிரபுசங்கர் க



ஒரு செயற்கையான சிரிப்பை
அடையாளமான
ஒரு முகத்தை அடிக்கடி
பார்த்துப் பார்த்து
நானும் அவ்வப்போது
சிரிக்கிறேன்...
இது செயற்கையா?
இது இயற்கையா?
எதுவாயினும் இருக்கட்டும்...
ஒற்றைச் சிரிப்பினில் தான்
எத்தனை சூட்சமம்...
போலிச் சிரிப்பினில்
பொங்குது மங்களம்...
அதுவே உண்மையென
நம்புது நம் மனம்...
புழுங்கும் சிரிப்பினில்
புழுங்காத என் முகம்
புளங்காகிதம் அடையுமோ மனம்
சிரிப்பிலாவது என் உத்தமம்!

★ ம.சக்திவேலாயுதம்

ஆல மரத்தை
ஆன மரம் என்று
மழலையில் சொன்னது
ஒரு குழந்தை.

மகிழ்ச்சியில்
நூறு தும்பிக்கை விழுதுகள்
வளர்ந்தன
ஆலமரத்திற்கு.

★ தமிழ்ச்செல்வன்

அணைந்த தீக்குச்சி
ஐந்து முகம் காட்டுகிறது
எரியும் குத்துவிளக்கு...

★ ஐ.தர்மசிங்



## நானும் கடவுள்

அமைதியாக இருக்க வேண்டும்,
ஆனால் எல்லாவற்றையும் செய்வதாய்
நம்ப வைக்க வேண்டும்.

பேசாமல் இருக்க வேண்டும்
ஆனால் வெவ்வேறு வடிவங்களில்
பேசிக்கொண்டிருப்பதாய்
நம்ப வைக்க வேண்டும்.

கேட்காமல் இருக்க வேண்டும்,
ஆனால் கேட்பதாய்
நம்ப வைக்க வேண்டும்.

யார் கண்ணுக்கும் தெரியக்கூடாது
ஆனால் எல்லாவற்றையும் பார்த்துக்
கொண்டிருப்பதாய் நம்ப வைக்க வேண்டும்.

இல்லாமல் இருக்க வேண்டும்
ஆனால் இருப்பதாய்
நம்ப வைக்க வேண்டும்.

அமைதியாய் இருக்க ஆரம்பித்து
இறைவனாகும் முதல் படியில்
ஏறியாயிற்று.

கடவுளைத் தேடி கண்டறிவதை விடவும்
கடவுளாதல்
எளிதாகத் தான் இருக்கக்கூடும்...


★ அ.சீனிவாசன்

அன்பை கொல்வதற்கு
இன்னொரு அன்பை
ஏன் ஆயுதமாக்குகீறீர்கள்!

மூன்றாம் உலகப் போரா?
போலி அன்பா?
எது அதிக மரணத்தை
விதிக்கும்!

அன்பு ஆயுதமானபின்
நிராயுதபாணிகளுக்கு இனி
நிழல் கூட சொந்தமில்லை!
இனி அன்பே சவம்!

★ தமீம்.அசாருதீன்



## தீயென்று சொன்னாலும் சுடும்...

மிகச் சரியாக என்னை
கவனித்துக் கொண்டிருக்கிறது
என்னுடைய அரூபம்...
வேறுபட்ட கருத்துருக்கள்
ஆட்கொள்ளும் போது
மிகச் சரியாக
முன்னறிவிப்பு செய்ய தவறுவதில்லை...

உருவ கேலி
செய்பவர்கள் முன் நான்
உருவமற்று இருக்க
என்னை அனுமதிக்கிறது...

மனம் வடிக்கட்டியவர்களை
தூர பட்டியலில் வைத்திருக்கும் யுக்தியை
எனக்குள் புதுப்பித்துக் கொண்டேயிருக்கிறது
என்னுடைய அரூபம்...

சொற்களின் காட்சிப் பிழைகள்
வர்ணம் பூசிக்கொண்டாலும்
மயங்காமலிருக்க
அவ்வப்போது சொல்லித்தருகிறது...

விவாதங்களால்
நிறைந்து இருக்கிறது என்னுடைய
பெருஞ் சிந்தனைகள் யாவும்...

உள்வாங்கும்
கடலின் கரையோர நிதர்சனங்களை
நான் உணர்ந்து தேடும்போது
பேரலையொன்று
கரை மீறி செல்கிறது...

இழுத்து போடப்பட்ட
வெட்டிய மரமென
திடலில் கிடத்தப் படுகிறேன்...
அப்போது காய்கிறேன்...
பெருந் தழலொன்று
உறைந்த நிலையில் இருக்கிறது...
தீயென்று
சொன்னாலும் சுடும் சில வார்த்தைகள்...

★ பன்னீர்செல்வம்



மலைகள் அசையும் என்றோம்
நம்ப மறுத்தீர்கள்
மலைக்கு வயதாகும் என்றோம்
நம்ப மறுத்தீர்கள்
மலைகள் கரையும் என்றோம்
நம்ப மறுத்தீர்கள்
மலைகள் சரியும் என்றோம்
நம்ப மறுத்தீர்கள்

வாய் ஓயாது இயற்கையை
பாதுகாப்பது குறித்து பேசினோம்
தொணதொணப்பு என்றீர்கள்
சின்ன சின்ன நுட்பங்களை
உங்களுக்கு தெரிவித்துவிட
துடித்துடித்து எழுதினோம்
வெற்றுத் தகவல் குவியல் என்றீர்கள்...

காதல்தான் உலகம் என்றீர்கள்
அறிவற்ற கவர்ச்சிதான் உணர்வும்
உள்ளமும் என சிலாகித்தீர்கள்
நாங்கள் எல்லையோர போர்வீரனாக
உதாசீனங்களை ஊதித் தள்ளி
மீண்டும் மீண்டும் களமிறங்கினோம்...

உணர்வும் ரசனையுமற்ற
மரமென்றீர்கள் மலையென்றீர்கள்
தேவைக்கு ஒட்டிக்கொள்ளவும்
வெட்டிக்கொள்ளவும்
தூக்கியெறியவும் செய்தீர்கள்...

நிலம் முழுதும் கருங்கல்
கிரைனைட் மார்பிள் விதவிதமாய் பெயரீட்டு
பாவினீர்கள் பழித்த எங்களை
பழமைவாதிகள் என்றீர்கள்...

தார் ஊற்றி பூமிக்கு
கறுப்புகொடி காட்டினீர்கள்...
வேகம் குறையாது விரையும்
ஊர்திகளில் விரைந்து சென்றீர்கள்
மரமடர்ந்த வனம் காண...
மழைநீர் மண்ணிற்குள்
இறங்காது என்று மருகினோம்
அதெல்லாம் எட்டாம் வகுப்பு
பாடத்தில் வந்தது என எள்ளி நகையாடினீர்கள்...

இதோ... நிலச்சரிவு வந்து சொன்னால்தான்
நம்புவீர்களென
வயதான மலைகள் அசைந்தன
கரைந்தன சரிந்தன...
ஏன் முன்பே இதையெல்லாம்
புரியும்படி சொல்லவில்லை என்கிறீர்கள்...

அப்போது நீங்கள் ஏதோவொரு
காதலியின் கவிதைக்கு கீழ்
சிக்குண்டு கிடந்தீர்கள்...
பாறைகளை காண மறந்து
பாறையில் பயணிக்கும் நீரையும்
பூக்கும் பூவையும் ரசித்து
கவிதை புனைந்தீர்கள்...



திரைநாயகனின் நாயகிகளின்
ஆடை நெகிழ்வதை வாய்பிளந்து
பார்த்துக்கொண்டிருந்தீர்கள்
அப்போதுதான் எங்கள்
மலையன்னை பூமியை நோக்கி
இறங்கத் தொடங்கியிருந்தாள்...

பெண்ணின் அங்கங்களை
பெண்களும் ஆண்களுமாய்
சொல்லிச் சொல்லி மோகித்து
சுயம் இழந்திருந்த வேளையில்தான்...
மலையன்னை பூமியை நோக்கி
இறங்கத் தொடங்கியிருந்தாள்...

யாரும் கவனிக்கவேவில்லை
மெள்ள அமிழத் தொடங்கிய
மனித இனத்தின் கூக்குரல்
மீண்டும் இயற்கையை
சபிக்கும் இன்னுமொரு
நாளாக விடிகிறது...

உருளும் மலையன்னையும்
அவளின் பிள்ளைகள் மண்துகள்களும்
மலைவீழ் நீரும் உங்கள்
காலடியில் வந்து வீழ்ந்து
சொல்கின்றார்கள்...
கல்குவாரிக்கு இட்டுச் செல்லுங்கள் என்று...
கதறி அழுகிறீர்கள்...

கல்லறையோ மண்ணறையோ
கூக்குரலிடும் மனித இனமே
கல்குவாரியெனும் கல்லறைக்காக
வெட்டப்பட்டப்போது மலைகள்
சிந்திய கண்ணீரை அறிவீர்களா!

நீரினைப் பாழ் செய்தபோது
கதறி வீழ்ந்த மழையின்
துயர் அறிவீர்களா!
கடலை காட்டை வானை மலையை
நிலத்தை நீரை அறியாது எதை அறிந்துதான்
என்ன செய்யப்போகிறீர்கள்...

மலைகளை மட்டுமல்ல மலைவாழ் மக்களையும்
கவனிப்பதே இல்லை நீங்கள்
கானுயிர்கள் காண் உயிர்கள்
மட்டுமே உங்களுக்கு.
சரி சரி நேரமாகிறது...

சாங்கிய சம்பிரதாய கேடு
வந்துவிடவே கூடாது
என் கவிதையை நான் எழுதிவிட்டேன்...
நம் கடமை முடிய வேண்டுமல்லவா?
வயநாடு நிலச்சரிவு என
ஏதாவதொரு தொகுப்பு வரக்கூடும்...
நாமும் தியாகிகள் ஆகலாம்.
இன்றே!
எழுதிவிடுங்கள் உங்களின் கவிதையையும்...

★ கோ.லீலா.



வழக்கமான தேநீர் கடை
கைகழுவ வைத்திருந்த பாத்திரத்தில்
தாகம் தணிக்க வந்த நாயொன்று
அத்தனை அலட்சியமாக
விரட்டப்பட்டது
சனியனை கல்லெடுத்து அடி
எப்பப் பாத்தாலும் வந்து
வாய வைச்சிக்கிட்டு
என முனகியபடி
வேலையை தொடர்ந்தார்
தேநீர் கடைக்காரர்
அதுவரை வெதுவெதுப்பாக உள்ளே
இறங்கிக் கொண்டிருந்த தேநீர்
கொதிக்கத் தொடங்கியது மனதில்!!!

★ கி.கவியரசன்

அடிக்கடி ஒலிக்கும்
அழைப்பு மணிக்கிடையில் புத்தரது மௌனம்
கலையாமல் தான் இருக்கிறது...!

★ ச. சத்தியபானு

வெளியேற வழியில்லாத
சுற்றிலும் அடைத்துக் கட்டிய
குளத்து நீரை லேசாக
சலன வட்டங்களாக்குகிறது காற்று!

பெரிய பெரிய அலை வட்டங்களாக்குகிறது
யாரோ வீசிய கற்கள்!

உள்ளே விழும் கசடுகளையெல்லாம்
வெளியேற்ற முடியாமல்
தன்னுள்ளேயே அடியாழத்தில்
புதைக்கிறது குளம்!!

காற்றோ, கற்களோ, மனிதர்களோ
இல்லாதபோது தெளிவாகத்தான்
இருக்கிறது குளம்!!!

★ லாஸ்யா



வீட்டிலிருந்து மயானம் வரை
ஒப்பாரியை கூவி விற்கிறது ஊடகம்
பிரபலமானவர் மரணம்

★

இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்
ஆழ்ந்த இரங்கல்
இவ்வளவுதான் முகநூல் பாசம்

★

நீர் அழகாக கோலம் போடுகிறது
இத்தனைக்கும் அந்தக் கல்
ஒரு புள்ளிதான் வைத்தது.

★

கல்லை எடுப்பதற்குள்
தப்பித்தது என் மனிதநேயம்
வாலை ஆட்டிவிட்டது நாய்

★

உழைப்பை விழுங்கியது
ஊதியத்தை வாந்தி எடுத்தது
குடித்த மது

★

இறந்த அம்மா
உயிரோடு வருகிறார்
அலைபேசியில் அம்மா காலிங்

★ **நயினார்**

நரை திரை யென
அலையடித்தாலும்
மூப்பில்லை கடலுக்கு

உப்பைத் தின்ற
கடல்
நீர் குடித்தே வாழ்கிறது

★ **பூங்கோதை கனகராஜன்**

அன்பைத் தவிர
வேறில்லையென்கிறேன்
வேறென்ன வேண்டுமென்கிறாய்...

★ **வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்**



## நட்சத்திரங்கள் சிறு குறிப்பு

குறையாத பருக்கள்
ஆயினும் குன்றாத அழகு.
வான்மகள் முகத்தில்

★

சிதறிக்கிடக்கும்
சீனித்துகள்கள்.
எங்கே எறும்புகள்?

★

வற்றிவிட்ட குளத்தில்
எட்டிப்பார்க்கும்
கூழாங்கற்கள்.

★

கொட்டிக்கிடந்த வைரக்கற்களை
பகலில் எடுத்துப்போன
கள்வன் யாரோ?

★

பால்வீதி பாயாசத்தில்
மிதக்கும்
முந்திரித் துணுக்கு

★

ஒப்பனை கலைக்காமல்
உறங்கும் குழந்தை.
ஜிகினா இரவு.

★

அமுதூட்டிய அன்னை
துடைக்க மறந்த
சொட்டுத்துளிகள்.

★ கௌ ஆனந்தபிரபு



## பசித்த வயிறு

சிலமணி நேரத்தில்
மீன்பிடி தடைகாலம்
முடியும் நாளாய் இருந்தது

பழுதுதீர்த்து
புதியபுதிய வலைகளோடு
காத்திருந்தது படகுகள்

வானத்தில் மேகங்கள்
வண்ணம் கருமையாய்
திரண்டது

கடலோரம்
காற்றின் வேகம்
கூடிக்கொண்டே இருந்தது

உயர உயரமாய்
அலைகளை எழுப்பி
கடல்காட்டும் எச்சரிக்கைக்கு

உடன்பட்டு கரையிருக்க
அஞ்சும் மனதை மிஞ்சித்தான்
துணிகிறது பசித்த வயிறு.

★ சூ. சசி

நிழலுக்கு நிறுத்திய
என் இருசக்கர வாகனத்தின் இருக்கையிலும்
வேகம் காட்டும் கண்ணாடியின் மீதும்
மஞ்சள் பூக்களை தூவி வைத்திருக்கும்
மரத்தின் பெயர்
என்னவென்று தெரியவில்லை
தூசியைத் தட்டிவிடுவதைப் போல
அத்தனை சுலபமாக
என் இருக்கையின் மீது
அமர்ந்திருக்கும்
மரத்தின் அன்பினை
தள்ளிவிட மனம் வருவதில்லை
ஆகவே கொஞ்ச தூரம்
பூக்களுடனே பயணிக்கிறேன்

★ மகேஷ் சிபி



## ஏகாந்த நினைவுகள்

தனிமைத் தீவில்
அடைபட்ட பறவையாய்
உன் நினைவுகளில்
சிக்குண்டு கிடக்கிறேன்

உன்னுடன் கதைத்த
வார்த்தைகள் ஒவ்வொன்றும்
மனதில் எதிரொலிக்க
ஏக்கப் பெருமூச்சுடன்

விழியோரம் கசிந்திடும்
நீர்த் திவலைகள்
சொல்லிக் கடக்குது
எந்தனளவிலா நேசத்தை

எதிர்கால வாழ்வியலைப்
பற்றிய சிந்தனைகளை
வீணாகி விட்டுப் போனதெங்கே
மன்னவனே

ஒவ்வொரு நாளும்
உன் வரவை
எதிர்நோக்கிய கண்களை
வறட்சியுரச் செய்து

மீளாத்துயரில் ஆழ்த்தி
நினைவுகளை மட்டும்
விடுத்து எந்தன்
உயிரெடுத்துப் போனதெங்கே...!!

★ நிர்மலா சென்னியப்பன்



முதல் பார்வையில்
முற்றுப் பெற்றிருக்கலாம்
இதயங்களை கண்டிப்புடன்
இறுக்கிப் பிடித்து வைத்திருந்திருக்கலாம்
சந்திப்புகள் சாக்கு போக்குடன்
தவிர்க்கப்பட்டிருக்கலாம்
முத்தங்கள் தித்திக்காமல்
இருந்திருக்கலாம்
நேசத்தின் ஆயுள் நீட்ச்சியின்றி
இருந்திருக்கலாம்
ஊடல்களுக்கு உரமிட்டு
வளர்த்து விட்டிருக்கலாம்
கூடல்களை அலட்சியப்
படுத்தியிருக்கலாம்
கனவுகளுக்கு வர்ணம் பூசுவது
பற்றி கொஞ்சம் யோசித்திருந்திருக்கலாம்
பிரிவுதான் முடிவென்றால்
இத்தனை மெனக்கெடல்களை
மேற்கொள்ளாமல் இருந்திருக்கலாம்

★ ஷிபா

ஏன்?
இதை நான் சொல்லக் கூடாதா
என்று பல முறை சொன்ன
ஏதோ ஒன்றை
நான் ஆமோதித்து இருக்கிறேன்...
அப்படியாக
ஆராதிக்கும் பொழுதெல்லாம்,
அழகியலோடு கூடிய
செல்லச் சிரிப்பு ஒன்றை
உதிர்த்து விட்டுப் போகிறாய்...
என்ன சொல்ல?
பூமி சுழலுகிறது.

★ சகா



"ஆசையே துன்பத்திற்கு காணரம்...!"
ஆம் கணவா
உன் ஞான ஆசையே
என் துன்பத்திற்கு காரணம்
யசோதரை சொன்னதும்
புத்தன் தலைகுனிந்தான்.

★ கோவை. நா.கி.பிரசாத்

ஒரு மீட்சியின்
ஒளி வந்து போனது
பார்வையற்றவனின்
பாத்திரத்தில்விழுந்த
காசு

★ பாபு


மின்விளக்கு அணைந்ததும்
கைப்பேசி வெளிச்சத்தில்
வட்டமடிக்கின்றன விட்டில்பூச்சிகள்.

★ ச.ப.சண்முகம்

அகதியின் கிழிசல் கூடாரம்
ஒரு கணம் வெளிச்சத்தில் ஒளிர்கிறது
விழும் குண்டு

கிழிசல் கூடாரத்தை
காட்டிக் கொடுத்தது
நிலவொளி

★ கம்பம் ஷர்ஜிலா



## வாடகை வீடு

ஒவ்வொரு முறை
வீடு மாறும் போதும்
கட்டைப் பைகளைப் போல
கனக்கிறது மனது

சீட்டுக்கட்டைப் போல் கலைந்து கிடக்கின்றன
வரிசையாய் அடுக்கி வைத்திருந்த
பிரியமான புத்தகங்கள்

அடிக்கடி வீட்டை மாற்றுவது
எளிதில்லைதான்
என்ன செய்வது
புறத் தூண்டல்களும் அகத்தூண்டல்களும்
காரணிகளாகி விடும்போது

வீடு கனவுத் திட்டம்
கலையாத கனவாகவே நீள்கிறது
ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும்

வரவு செலவில் ஆங்காங்கே
துண்டு விழுந்தாலும்
வேட்டியைப்போல் மொத்தமாய்ச்
சென்று சேருகிறது
மாதந்தோறும் வீட்டு வாடகை

குற்றம் பார்க்காத சுற்றம் இல்லை
என்பது போல்
எத்தனைச் சுத்தமாய்
வீட்டை வைத்திருந்தாலும்
குற்றம் காணாமல் இருப்பதில்லை
வாடகைச்சுற்றம்

தண்ணீர்ப் பிரச்சனை
எழும்போதெல்லாம்
கண்டும் காணாமல்
போய் விடுவது தான் சரியென்று தெரிந்து
வைத்திருக்கிறார்கள்
காவிரி மேலாண்மைக் குழு போல்
வீட்டு உரிமையாளர்களும்

வீடு மாறப் போவதைத்
தெரிந்து கொண்டு சாப்பிட மறுக்கும்
செல்ல பிராணிகளிடமும் கூண்டுக்கிளிகளிடமும்
ஒவ்வொரு முறையும்
விம்மலுடனே நடந்தேறுகிறது
பாசப்போராட்டம் ...

★ செந்தூர் குமார்



நாமாக விரும்பி சுமக்கும்
சிலுவைகள் போல் இலகுவானதில்லை
அவர்களால் அளிக்கப்படும சிலுவைகள்...

சுமைகள் தாங்குவதும்
எல்லோருக்கும்
வாய்க்கப்படாது வலிமையுள்ளவர்களுக்கு
வழங்கப்படும் விருதெனக்
கொண்டே கொண்டாடுங்கள்

அறையப்பட்ட
ஆணிகளின்
வேர்கள் ஒரு நாளில்
பூக்களேந்தி நிற்கும்...

★ நித்யா

பசுஞ்சாணமுற ஊறிய அவ்விடத்தில்
தூவிவிடப்பட்ட கோழிக்கொண்டை வித்தை
கிண்டிக் கிளறி அகழ்வாராயும் பணியை
செவ்வனே செய்யும்
சேவலின் அலகு உடைபட்டுக் கிடப்பதை
இப்போது தானறிந்தேன்
பெட்டைக் குக்குடத்தால் உடைக்கப்பட்ட
பத்தாயத்தில் கிடக்கும் விதையை
மீண்டும் தூவு
வீசியெறியும் விதைகள் யாவும்
மலட்டுக் குருதியூறியவை.

★ கருவை ந.ஸ்டாலின்



## பிள்ளையற்றக் கூடு

கிளைகளின் இடையே
அழகாய் ஒரு கூடு
கட்டுகிறது அப்பறவை

அதில் ஒரு பெண் பறவை
இணை சேர்கிறது

கூடல்கள் குறைந்த
பொழுதுகளில்
சில இறகுகள் உதிர்கிறது

கண் இமைக்கும் நேரத்தில்
பெரும் மழையோடு
புயல் வீசுகிறது

அக் கூட்டின் கனவுகள் சிதறி
தரை தொடுகிறது

கூடற்ற அப்பறவைக்கு
சில கிளைகள் அடைக்கலம் தருகிறது

புயல் முடிந்த பின்னொரு நாளில்
மீண்டெழுகிறது
புதிதாய் ஒரு கூடு

சிறிது நேரத்தில்
காதலோடு வந்தமர்கிறது
புதிய பறவையொன்று

மற்ற கூட்டின் பறவைகள்
மெல்ல கிசுகிசுக்க
தொடங்குகிறது

இக் கூட்டில்
முட்டைகள் இடப்படாத
பெரும் குறையினை

புதிய கூட்டின் பறவைகளுக்கு
அப்பறவைகள்
என்ன வேண்டுமானாலும்
பெயர் வைத்துவிட்டு போகட்டும்

ஊடலற்ற இக்கூட்டில்
மீண்டும் மீண்டும்
உதிரத் தொடங்குகிறது
சில இறகுகள்

ஒரு பறவையின் இறகுச் சூட்டில்
மற்றொரு பறவை
குளிர் காய்ந்து கொள்கிறது

★ சுரேஷ்பாபு ராசேந்திரன்



ஒரு சிறிய மனமுறிவினால்
ஒரு சிறிய புரிதலின்மையால்...

இப்போது
இப்பிரிவு
நிகழலாம்...

அது நமக்குள்
அவ்வப்போது நிகழும்
ஒரு விபத்து
அவ்வளவே...

அதற்காக எல்லாம்
உன் மொத்த நேசத்தையும்
சந்தேகித்தி மாட்டேன்...

இப்போது
நீ என்னை
ஒவ்வொரு இலையாய்
உதிர்த்து முடிக்கலாம்...

பின்
வசந்தத்தில் ஒருநாள்
நீயே எனை மீண்டும் மீட்டெடுக்கலாம்...

அது நமக்குள் நாம்
அடிக்கடி ஆடுமோர் கண்ணாமூச்சி
அவ்வளவே...

அதற்காக எல்லாம்...
உன் அத்தனை அன்பிலும் நம்பிக்கையிழந்து
போய்விட மாட்டேன்...

இன்னும்
இந்த இடைவெளிகள்
கனத்த மௌனங்கள்
அலட்சிய பார்வைகள்
அத்தனையும் தாண்டி...

உன்னை நான் அறிவேன்...
உன் மாபெரும் காதலையும் கூட...

★ தமிழ்மகன்



ஆற்றிடை உறிந்த நீரை
வானும்
மாற்றித்தரும் இங்கு மழையாய்

வாள் கொண்டருப்பினும் வாழை மீண்டும்
சேயெனப்பிறந்து தாயெனதளிர்க்கும்

வேர்வரை பிடுங்கி வேறிடம் வீசினும்
பாறையை துளைத்து பலன்தரும் மரங்கள்

வெட்டிடும்போதும் விலகிப்பின் சேரும்
வாய்க்கால் தண்ணீர்

கிளை அறுத்த போதும் மழை நீர் குடித்து
மறுபடி கனிதரும் மரங்கள்

எனை அறுத்து போட்டால் ?

★ மணவை லைவின்

**வாசனை!**

உழைக்கிற மக்களின்
வியர்வையை உறிஞ்சுகிற
முதலாளிகள் பூசுகிற
வாசனைத் திரவியங்களைவிட,
உழைக்கிற மக்களின்
வியர்வைத் துளிகள்
வாசனை மிக்கது!

★ வைகை விஜய்

தேநீர் கடைக்காரனை
பருகிக்கொண்டிருக்கிறது...
அருந்த காசில்லாதவனின் கண்கள்!

★ மு.முபாரக்



நிர்வாண எழுத்துருக்களை
அடுக்கி வைத்திருந்தேன்
அது மௌனத்தின்
பிரதிநிதியானது

நிலவில்லாத பூரண இருள்
நாளொன்றில் மின்மினிகளற்ற
நாழிகையொன்றில்
என்னோடு பேசத் துவங்கியது

தன்னை மேலும்
முழு நிர்வாணப்படுத்தி
என் முன் அது நின்றபடி
என்னையும் தன்னைப்போல்
மனமவிழ்த்துக்காட்டச் சொன்னது

தலையை வெட்டி அதன் காலுக்குச்
சமர்ப்பித்த பின்
அதனருகில் நான் நிற்பதையது
விரும்பாது நடுநிசியில்
ஓர் கனவுள் எனை கைவிட்டுச் சென்றது
அவ்விரவைப் போலவே

நற்காலை விழித்தெழுந்த நான்
துணி பொதிந்த
மூட்டையாகத்தான் கிடந்தேன்
என் எழுத்தருக்களுக்கான
தடையங்களற்ற நாளொன்றில்

★ சாய் மீரா

ஆலய வாசலில்
சிதற விடப்பட்ட தானியங்களை
மேய்ந்து கொண்டிருக்கிறது
காகமொன்று

தண்ணீர் பந்தலருகே
மூன்றாவது முறையாக
வரிசையில் நிற்கிறாள்
நைந்த ஆடை சிறுமியொருத்தி

குடம் குடமாய்
பால் ஊற்றியும்
தாகம் தீராமல் தவிக்கிறது
கடவுள் சிலையொன்று

★ முனியாண்டி ராஜ்



எனக்கான
உன் இருப்பு குறித்து
பரீட்சை வைப்பதே
வாழ்க்கை ஆகிவிட்டது எனக்கு
தேர்வில் கலந்து கொள்ளாமல்
சோதிக்கும் என்னையே
தோல்வியுறச் செய்யும் வித்தை
உனக்கு தெரிந்திருப்பது தான்
என் காதலின் துரதிஷ்டம்

★ தி.கலையரசி

அடர்வனத்தின் இருளில்
முளைத்திடும் வெளிச்சத்துகள்களில்
தோன்றி மறையும் சாலையென
பயணத்தினூடே
வந்து வந்து செல்கிறது
கடைசி சந்திப்பின் நினைவுகள்...

★ மகேந்திரன் நவமணி

பூத்துக் காய்த்து
பருவம் ஓய்ந்தப்பின்னும்
ஒன்றிரண்டு பூக்கள் இருந்தன அம்மரத்தில்

பருவம் முடிந்தப்பின்னும்
ஏன் பூத்திருக்கிறாய் என்று
கேட்டேன்
பட்டாம்பூச்சிகளை
ஏமாற்ற மனமில்லை என்றது

இலைகள் மட்டுமே இருந்த
செம்பருத்தி செடியிடம்
மலர்கள் வேண்டுமென கேட்டேன்
சிவந்த மொட்டொன்று
சீறிப்பாய்ந்து வளர்ந்திருந்தது

வெக்கையில் புரண்டு
படுத்திருந்த இரவொன்றில்
சாரல் மழை இதமாய்
உறங்க வைத்தது

மண்டியிட்டு கேட்டாலும்
மனிதர்களிடம் இல்லாத அன்பை
இயற்கை அள்ளித் தருகிறது
வாழ்தல் இங்கு இனிது
இயற்கையுடன்.

★ செ.ரா.கிருஷ்ணகுமாரி



யாருடைய பொம்மை
என்று கேட்டதற்கு
பாப்பாவின் பொம்மை என்றாள்.

யார் அங்கே வைத்தார்கள்
என்று கேட்டால் பாப்பா என்பாள்.

யார் நீ என்று கேட்டால்
பாப்பா என்பாள் பாப்பா.

பாப்பா இங்கே வா என்றால்
அருகில் வந்து பாப்பா வந்தாச்சு
என்று அறிவிப்பாள்

நான் எனக்கு
போன்ற வார்த்தைகள்
அவளுக்கு இன்னும் தெரியாது.
அதுவரை பாப்பாவாகவே
இருக்கட்டும் பாப்பா.

★ தமிழ்ச்செல்வன்

## இரவின் விழிப்பு

மலர்ந்த முகத்துடன்
உறங்கச் செல்கிறான் நனவிலி.

மேகங்களற்ற வெளிர்நீல வானில்
இறகுகளை மெல்ல
விரித்துப் பறக்கிறது பறவை.

சொல்வதற்கு ஒன்றுமில்லை
புதிய மண்ணில் பதியனிட்டிருக்கிறேன்
எனது விதைகளை.

நெகிழிப் பூக்கள் வாடுவதில்லை.
வாசனைத் திரவிய வாசத்துடன்
மலர்ந்தே இருக்கிறது மனக் குடுவைக்குள்.

எனது செடியில் மலர்கிற எல்லாப் பூக்களும்
உயிரசைவின் துடிப்புடன் அசைந்து
வாடி விழுகிறது என்றாலும்
மறுபடி பார் இன்னொரு
இன்னுமொரு மொட்டெனெ.

நனவுகளின் மண்ணில் விதைத்த விதை
மலர்ந்து கொண்டேயிருக்கிறது
உறக்கத்திற்குப்பின் மீண்டும் மலரும்
எனது விடியலில் உதிக்கிறது
பூவின் உதயம்.

★ ஆத்மாஜீவ்



## நானும் தான்

மிகச்சரியாக ஒன்பது நாட்களாக இரண்டு
தேன்சிட்டுக்களோடு எனக்கு பழக்கம்

என் ருமானியா மாமரத்தையும்
கருவேப்பிலை மரத்தையும்
நந்தியாவட்டைச் செடியையும்
சுற்றிச் சுற்றி வருகிறது ..

ஒரு நந்தியாவட்டைச்செடியின்
உள் அடுக்கில் புதிய கூடு ஒன்று
கட்டுகிறது இன்று
ஒரு நம்பிக்கை நம்பிக்கையாவதற்கு
ஒன்பது நாளாகிவிட்டது

மற்றபடி கூடு கட்ட
வேண்டாமென்று சொல்ல நான் யார்?
நானிருப்பதும் ஒரு கூட்டில் தானே.?

★ **வி.வி கலைச்செல்வி**

## இந்த உடலில் என்ன இருக்கின்றது

கொஞ்சம் சதைகள்
கொஞ்சம் எலும்புகள்
கொஞ்சம் ரத்தம்

அனைத்தையும் மூடிவைத்திருக்கும்
கொஞ்சம் தோல்

கொஞ்சம் ஆசைகள் கொஞ்சம் கனவுகள்
கொஞ்சம் நினைவுகள் கொஞ்சம் உணர்வுகள்
ஏன் இருக்கக்கூடாது என்று நினைக்கிறீர்கள்
உங்களுக்கும் அனைத்தும் உள்ளதுதானே

உறுப்புகள் வேறு என்று ஏன் சிதைக்கிறீர்கள்

ஒரு நொடியில் பிணமாகும் உன்னை
மண் காற்று நெருப்பு எவையுமே
ஆண் பிணம்
பெண் பிணம்
என்று பார்ப்பதில்லையே?

★ **லக்ஷ்மி**

படைப்பு

சமூகத்தின் இணைப்பு

# சிறை வாசிகளுக்கு

# புத்தக தானம் செய்வீர்!

**"ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும்" என்ற உயரிய எண்ணத்தோடு புத்தகங்களை திரட்டிக் கொண்டிருக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு இலக்கிய படைப்பு குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களை சேகரித்துக்கொண்டிருக்கிறது.**

புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

இலக்கிய படைப்பு குழுமம்

#3, அஜந்தா டவர்ஸ், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம், சென்னை – 600 024

Ph: +91 7338847788

padaippu    admin@padaippu.com    www.padaippu.com